**05.09.2023 அ.வ.எண்.55/2016 வா.சா.1 பரந்தாமன், த/பெ.ரங்கசாமி**

**குறுக்கு விசாரணை**

வா.த.சா.ஆ.2ல் புல எண்.655/1சி 1ம் பிரதிவாதி அடைய வேண்டிய சொத்து என கூறப்பட்டுள்ளது என்பது சரிதான். அது 7 செண்ட் ஆகும். அந்த 7 செண்ட் நீங்கலாகத்தான் எனக்கு உரிமை என சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேனா எனக் கேட்டால் ஆமாம். புல எண்.655ல் 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பாத்தியம் எனக் கேட்டால் 40 செண்ட் மற்றும் 7 செண்ட் மற்றும் கால்வாய்க்கு 5 செண்ட் ஆகும். வா.த.சா.ஆ.2ல் 1ம் பிரதிவாதிக்கு மேலும் 40 செண்ட் கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்ட புல எண்.655/1எஃப் வா.த.சா.ஆ. 2ல் எனக்கு ஒதுக்கப்படவில்லை என்பது சரியல்ல. புல எண்.661/2ல் எனக்கு இருந்த சொத்து முழுவதையும் 1ம் பிரதிவாதிக்கு பரிவர்த்தனையில் கொடுத்துவிட்டேன் என்பது சரிதான். வா.த.சா.ஆ.3ல் புல எண். 665/1சி-க்கு என் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா எனக் கேட்டால் ஆமாம் வழங்கப்பட்டுள்ளது. அந்த பட்டாவில் அந்த புல எண் இல்லை என்றால் அது வேறுபட்டாவில் உள்ளது. அந்த வேறுபட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. புல எண்.655/1ஏ கூட்டுப்பட்டாவில் உள்ளது. அது என் பெயரிலும் 1ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக உள்ளது. ஆனால் அந்த புல எண் வா.த.சா.ஆ.3ல் என் பெயரில் உள்ளது என்றால் ஆமாம் ஆனால் அது 1ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது. புல எண்.655/1சிக்கு கீழ்புறம் பி அட்டவணை சொத்து உள்ளது என்றால் அது சரியல்ல மேல்புறம் உள்ளது. பி அட்டவணை சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றும் அதனால்தான் பி அட்டவணை சொத்து அமைவிடத்தை தவறாக கூறுகிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. புல எண்.655/1சிக்கு நேராக உள்ள பி அட்டவணை புறம்போக்கு நிலத்தை கோபால கிருஷ்ணன் என்பவர் அனுபவிக்கிறார் மீதி உள்ள புறம்போக்கு நிலத்தை நான் அனுபவிக்கிறேன். பாகப்பிரிவினைக்கு பிறகு 13 ஆண்டுகள் கழித்து பரிவர்த்தனை ஏற்பட்டது என்பது சரிதான். பாகப்பிவினை முதலே பி அட்டவணை சொத்தை 1ம் பிரதிவாதிதான் அனுபவிக்கிறார் என்பது சரியல்ல. புல எண்.656 குளம் புறம்போக்கு ஆகும். அது ஊருக்கு பொதுவான ஊரணி என்பது சரிதான். அதில் கால்நடைகளுக்கு குடிநீர் எடுப்பதும் ஊர் மக்கள் பயன்படுத்துவதும் ஆகும்.பி அட்டவணை சொத்து தொடர்பாக எனக்கு பரிகாரம் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**